செய்தி வெளியீடு எண் : 1546 நாள் : 06.09.2022

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் சாராஸ் மேளா மற்றும் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை துவக்கி வைத்து, 75வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா சிறப்பு மலரை வெளியிட்டார்

***************

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், சென்னை, கலைவாணர் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள சாரஸ் மேளா மற்றும் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் இன்று (06.09.2022) துவக்கி வைத்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 75வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா சிறப்பு மலரை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. எம்.மகேஷ் குமார் அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்தக் கண்காட்சியில், ஆந்திரா, கோவா, இமாச்சல பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, ஒரிசா, ராஜஸ்தான் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களின் தனிச்சிறப்பு வாய்ந்த கலம்காரி, தாசர், சாந்தேரி மற்றும் பாக் பிரிண்ட், பந்த் புடவைகள் உள்ளிட்ட பல்வேறு ஆடை வகைகளும், முத்து நகைகள், மண், கண்ணாடி வேலை மற்றும் டோரி வேலை பொருட்கள், பழங்குடியின நகைகள், சன்னபட்னா பொம்மைகள்,

சபாய் புல் பொருட்கள், பனை ஓலை ஓவியங்கள், வீட்டு அலங்கார பொருட்கள் உள்ளிட்ட பல்வகையான பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான மங்கையர் மனம் கவரும் பட்டு, பருத்தி ஆடைகள், அழகிய செயற்கை ஆபரணங்கள், பல்வேறு உலோகங்களால் உற்பத்தி செய்யப்படும் கண்கவர் கைவினைப் பொருட்கள், தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், சுற்றுச்சுழலுக்கு பாதிப்பில்லாத சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், மனம் மயக்கும் வாசனைப் பொருட்கள், அழகிய மரச் சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள், உடலுக்கு நலம் தரும் மூலிகைப் பொருட்கள், கோரைப் பாய்கள், அனைவருக்கும் ஏற்ற தரமான ஆயத்த ஆடை வகைகள், பரிசு பொருட்கள், நவராத்திரி பண்டிகைக்கு ஏற்ற கொலு பொம்மைகள், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்களின் இயற்கை சார் உற்பத்திப் பொருட்கள், பல்வேறு மூலிகைகள், கலைநயம் மிகுந்த கைவினைப் பொருட்கள், நவராத்திரி பண்டிகைக்கு ஏற்ற கொலு பொம்மைகள் உள்ளிட்டவைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத துணிப்பைகள், மஞ்சப்பைகள் விற்பனை செய்யும் அரங்கும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் தமிழ்நாடு அரசின் தோட்டக்கலை, ஆவின், கோஆப் டெக்ஸ் மற்றும் பூம்புகார் ஆகிய துறைகளின் அரங்குகளும், பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத துணிப்பைகள், மஞ்சப்பைகள் விற்பனை செய்யும் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

2022 செப்டம்பர் 6ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சி வளாகத்தில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இலவசமாக வாகனங்கள் நிறுத்துமிடம்,

குழந்தைகளுக்கான பல்வேறு விளையாட்டுகள் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இத்தகைய சிறப்பு மிக்க சாராஸ் மேளா மற்றும் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியை அனைவரும் கண்டு களித்து, பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in